தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்



Vol: 03 | Issue: 248 | 4 Pages | 16.07.2026 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 03 | இதழ்: 248 | 4 பக்கங்கள் | 16.07.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை**

**விளக்கம்:** பொருள் இல்லை என்று இரந்து அதைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் இல்லாதபோது,பொருள்கொடுப்பவரிடத்தில் என்ன புகழ் உண்டாகும்?

## திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த வடச்சேரி நூலகத்தில் காமராஜர் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்



திருப்பத்தூர்மாவட்டம் ஆம்பூர்அடுத்த வடச்சேரி நூலகத்தில் காமராஜர் பிறந்த நாள் விழா(15.07.2026) சிறப்பாக நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் வாசகர் வட்ட தலைவர் திரு. மு.பாலசுப்ரமணியன் மற்றும் துணைத் தலைவர்.திரு.நல்லதம்பி மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. அனிதாபாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர் நூலகத்தின் பொறுப்பு நூலகர் ஜெ.விஜயகுமார் வரவேற்புரை ஆற்றினார்

சிறப்பு விருந்தினராக திருப்பத்தூர் மாவட்ட நூலக அலுவலர் கணேசன் அவர்கள் காமராஜர் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பேச்சு போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பரிசு வழங்கினார் மேலும் புரவலராக சேர்ந்தவர்களுக்கு சிறப்பு செய்தார் மூப்பர்காலனி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மாணவ/மாணவிகள் பேச்சு போட்டியில் கலந்து கொண்டனர் இப்பள்ளியில் பயிலும் 50 மாணவர்களை வடச்சேரி நூலகத்தில் உறுப்பினர் சேர்க்க திரு.பி சௌந்தரராஜன் CRPF Inspectr (Ret)நன்கொடை வழங்கினார்

வடச்சேரி நூலக வளர்ச்சிக்காக J.விஜய் இளஞ்செழியன் திருப்பத்தூர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் கொத்தூர் திரு.B.மகேஷ் மாவட்ட பொருளாளர்திரு N.சுரேந்தர் மாதனூர் மேற்கு ஒன்றிய தலைவர் திரு.C.K.M ஜெகத் மாவட்ட பொது செயலாளர் திரு.மதன் ஆசிரியர் திருமதி காவியா நவீன்அரசு திருப்பத்தூர் கிழக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் தமிழக வெற்றி கழகம் திரு.சுமியா ஆசிரியை ஆகிய 7 நபர்கள் தலா ரூ 1000 வீதம் வழங்கி புரவலராக சேர்ந்தார்கள்

உடன் வடச்சேரி நூலக தன்னார்வலர்கள் திரு.ஜோதி நா.சீனிவாசன் உடன் இருந்தனர்.

## கந்தர்வக் கோட்டை அருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் காமராஜர் 124வது பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாட்டம்



புதுக்கோட்டைமாவட்டம்கந்தர்வகோட்டைஒன்றியம்அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் காமராஜர் 124வது பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது. நிகழ்விற்கு தலைமை ஆசிரியர்தமிழ்செல்விதலைமைவகித்தார்.முன்னதாகமறைந்தமுன்னாள் முதல்வர் கல்விக்கண் திறந்த மாமேதை காமராஜர் அவர்களின் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய தலைவரும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15 கல்வி வளர்ச்சி நாள் குறித்து பேசும் பொழுது தமிழகத்தின் மறைந்த முன்னாள் முதல்வரான காமராஜரின், பிறந்த தினமான இன்று, 'கல்வி வளர்ச்சி தினமாக' கடைபிடிக்கப்படுகிறது. தொண்டு, தூய்மை, எளிமை, தியாகம், நாட்டுப்பற்று ஆகிய பண்பு நலன்களுக்கும் மனிதவடிவம் கொடுத்தால் அது நிச்சயம் காமராஜராகத் தான் காட்சியளிக்கும் என்று தலைவர்களால் புகழப்பட்டவர். பல்கலைக்கழகப் படிப்போ, பட்டமோ பெறாதிருந்தும், தனிப்பட்ட முறையில் ஏராளமான நூல்களைப் படித்து உலக அறிவை வளர்த்துக் கொண்டார். தமிழ்நாட்டின் முதலமைச்சராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1954 முதல் 1963 வரை முதலமைச்சராக இருந்தார். பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி மாணவர்கள் அனைவரும் சமம் என்பதை உணர்த்த, இலவச சீருடை மற்றும் புத்தகங்களை வழங்கினார். இவரது ஆட்சிக்காலத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், மேட்டூர் அணையின் நீர்மின் திட்டம், குந்தா திட்டம் மற்றும் பல்வேறு பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு தமிழகம் தொழில் துறையில் வளர்ச்சி கண்டது.

பாரத ரத்னா: நாட்டுக்கு ஆற்றிய தொண்டிற்காக 1976ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது இவருக்கு வழங்கப்பட்டது. மறைந்த முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 15ஆம் நாள் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடி மகிழ்கிறோம். காமராஜர் கண்ட கனவை ஒவ்வொரு மாணவரும் நிறைவேற்ற வேண்டும் எனவும், காமராஜர் அவர்களின் வாழ்க்கை வரலாறை அனைவரும் படித்து தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் பேசினார். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் செல்விஜாய், கௌரி, கணினி உதவியாளர் தையல்நாயகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய மகத்தான தலைவர் காமராஜர் முதல்அமைச்சர் விஜய் புகழாரம்

சென்னை, ஜூலை 16

காமராஜரின் 124வது பிறந்தநாளையொட்டி சென்னை அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில் அமைந்துள்ள காமராஜர் உருவச் சிலைக்கு முதல்அமைச்சர் விஜய் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிலையில் விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சியின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்திய மகத்தான தலைவர் காமராஜர் என்று முதல்அமைச்சர் விஜய் புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழகத்தின் கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்களை அமைத்து கல்விக் கண் திறந்து, வறுமையால் வாடிய ஏழைக் குழந்தைகளின் பசியைப் போக்க மதிய உணவுத் திட்டம் தந்த மாமேதை, ஏழைப் பங்காளர்,

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளில் அவரது தியாகத்தையும் சாதனைகளையும் நினைவுகூர்ந்து கல்வி வணக்கத்தை செலுத்துகிறேன்.



கல்விச்சாலைகள் மட்டுமின்றி, நீர்த்தேக்கங்களையும், முக்கிய தொழிற்சாலைகளையும் உருவாக்கி, விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சியின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்திய மகத்தான தலைவர்.

எளிமை, நேர்மை, தியாகம், தொலைநோக்குப் பார்வை, மக்கள் சேவை போன்ற உயரிய பண்புகளால் இந்திய அரசியலில் தனி முத்திரைப் பதித்ததோடு மட்டுமல்லாமல், மக்கள் நலனுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெருந்தலைவர் காமராஜரின் அடிச்சுவட்டில் நாமும் பயணித்து வளமான தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம்! கர்மவீரர் காமராஜரின் புகழ் ஓங்குக!

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## த.வெ.க.சார்பில் கல்வித் தந்தை காமராசரின் பிறந்தநாள் விழா



த.வெ.க.சார்பில் கல்வித் தந்தை காமராசரின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

குன்னூரில் கர்ம வீரர் காமராசர் அவர்களின் 124 வது பிறந்தநாள் விழா குன்னூர் கிழக்கு நகர செயலாளர் தாஸ்,நகர இணைச்செயலாளர் ஆர்மி தாஸ், நகர பொருளாளர்தேவாடேனியல்ஆகியோர்தலைமையில் நடைபெற்றது இதில் காமராசர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

## கோவை நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம்

கரூர் ரெயில் நிலையத்தில் தண்டவாளம் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதன் காரணமாக சில ரெயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) புறப்படும் பாலக்காடு டவுன் திருச்சி எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 16844) கரூர் ரெயில் நிலையத்தில் நிறுத்தப்படும். பராமரிப்பு பணிகள் முடிந்த பிறகு, இந்த வண்டி கரூரில் இருந்து திருச்சி சந்திப்பு வரை முன்பதிவு இல்லாத சிறப்பு ரெயிலாக இயக்கப்படும்.

இதேபோல்கோவைசந்திப்பிலிருந்துநாளைமறுநாள் காலை 8 மணிக்கு புறப்படும் கோவை நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 16322) கோவை திண்டுக்கல் இடையே மாற்றுப்பாதையில் இயக்கப்படும். இந்த ரெயில் போத்தனூர், பொள்ளாச்சி மற்றும் பழனி வழியாக செல்லும்.

இதன் காரணமாக கோவை வடக்கு, பீளமேடு, சிங்காநல்லூர், இருகூர், சூலூர் சாலை, சோமனூர், திருப்பூர், ஊத்துக்குளி, ஈங்கூர், ஈரோடு, பாசூர், கொடுமுடி, புகலூர், கரூர், பாளையம் மற்றும் எரியோடு ஆகிய ரெயில் நிலையங்களுக்கு வராது. எனினும் போத்தனூர்மற்றும்பொள்ளாச்சிரெயில்நிலையங்களில் மாற்று நிறுத்தங்கள் வழங்கப்படும் என்று சேலம் ரெயில்வே கோட்டம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்துறைப்பூண்டி வட்டம், மருதவனம் கிராமத்தில், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாவினை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பெ.விஸ்வநாதன் அவர்கள் வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.



திருவாரூர்மாவட்டம்,திருத்துறைப்பூண்டிசட்டமன்றதொகுதிக்குட்பட்டகுமாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புதியதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பெ.விஸ்வநாதன் அவர்கள் திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி வைத்தார்கள். திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வை.செல்வராஜ் அவர்கள், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.க.மாரிமுத்து அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் வாணியம்பாடி முழு நேர கிளை நூலகத்தில் காமராஜர் பிறந்த நாள் விழா இன்று 15.07.2026 சிறப்பாக கொண்டாடப்பட்டது இந்நிகழ்ச்சியில் வாசகர் வட்ட துணைத்தலைவர் சரவணன் அவர்கள் தலைமை தாங்கினார் நல்நூலகர் ஜெ விஜயகுமார் வரவேற்புரை ஆற்றினார் இதில் திருப்பத்தூர் மாவட்ட நூலக அலுவலர் ஏ.கணேசன் அவர்கள் காமராஜர் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்புரை ஆற்றினார் இந்நிகழ்ச்சியில் நூலக வாசகர்கள் நூலக நண்பர்கள் ஆகாஷ் செந்தில்குமார் மற்றும் பொதுமக்கள் போட்டித் தேர்வு மாணவர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

## பூந்தமல்லி அருகே துப்பாக்கி முனையில் பிரபல ரவுடி கைது



சென்னை, ஜூலை 16

பூந்தமல்லி அருகே கோர்ட்டில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த பிரபல ரவுடி சுதாகரை போலீசார் துப்பாக்கி முனையில் அதிரடியாக கைது செய்தனர்.

சென்னை அரும்பாக்கம், ராணி அண்ணாநகர் பகுதியை சேர்ந்தவர் சுதாகர் (வயது 37). இவர் மீது 3 கொலை வழக்குகள் மற்றும் 30க்கும் மேற்பட்ட பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. பிரபல ரவுடியும், ஆயுள் தண்டனை கைதியுமான அரும்பாக்கம் ராதாவின் முக்கிய கூட்டாளியான இவர், சில வழக்குகளில் ஜாமீனில் வெளியே வந்திருந்தார்.

ஜாமீனில் வந்த ரவுடி சுதாகர், கோர்ட்டில் ஆஜராகாமல் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்தார். அவரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து அதிதீவிர குற்ற தடுப்புப்பிரிவு போலீசார் சுதாகரை தேடி வந்தனர்.

பூந்தமல்லியை அடுத்த பாரிவாக்கம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சுதாகர் பதுங்கியிருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் நேற்று அதிகாலை சம்பவ இடத்துக்கு சென்ற போலீசார், அவர் பதுங்கியிருந்த வீட்டை சுற்றி வளைத்தனர். போலீசார் தன்னை சூழ்ந்து கொண்டதை அறிந்த சுதாகர் தப்பியோட முயன்றார். சமயோசிதமாக செயல்பட்ட போலீசார் அவரை துப்பாக்கி முனையில் மடக்கிபிடித்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சுதாகர் அரும்பாக்கம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். கோர்ட்டு உத்தரவின்படி அவரைசிறையில்அடைப்பதற்கான பணிகளில் அரும்பாக்கம் போலீசார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## கல்வித்துறையைத் தன் முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர மோடி அரசு துடிக்கிறது மாணிக்கம் தாகூர்



சென்னை, ஜூலை 16

தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

உயர்கல்வி நிறுவனங்களின் தன்னாட்சியைப் பறித்து, கல்வித்துறையைத் தன் முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர மோடி அரசு துடிக்கிறது!

NEET முறைகேடுகளையும், வினாத்தாள் கசிவுகளையும் கூடத் தடுக்கத் துப்பில்லாத மத்திய கல்வி அமைச்சகம், இப்போது பல்கலைக்கழகங்களைச் சீரழிக்கப் பார்க்கிறது! UGC, AICTE போன்ற அமைப்புகளைக் கலைத்துவிட்டு கொண்டு வரப்படும் 'Viksit Bharat Shiksha Adhishthan மசோதா 2025' இந்தியாவின் உயர்கல்வியைக் குழிதோண்டிப் புதைக்கும் எதேச்சதிகார நடவடிக்கை!

ஒருபுறம் மாணவர்களின் எதிர்காலத்தைப் பணயம் வைக்கும் ஊழல், மறுபுறம் மாநிலங்களின் கல்வி உரிமைகளைப் பறிக்கும் சர்வாதிகாரம்! மோடி அரசும், அவரது திறமையற்ற கல்வி மந்திரியும் இந்திய மாணவர்களின் கனவுகளோடு விளையாடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்கு எதிராகத்தான் ஒட்டுமொத்த இந்திய மாணவர்களின் உரிமைகளுக்காக நம் எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தி Chhatron Ki Goonj இயக்கம் மூலம் சமரசமற்ற போரைத் தொடங்கியுள்ளார். மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கும் இந்த மோடி அரசின் அட்டூழியங்கள் அனைத்திற்கும் 2029ல் முற்றுப்புள்ளி வைக்கப்படும்! காலம் மாறும், நம் ஆட்சி மலரும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் முத்தான பட்ஜெட்டாக இருக்குமா?: தமிழக மக்கள் எதிர்பார்ப்பு



சென்னை, ஜூலை 16

தமிழக சட்டசபையில் விரைவில் தாக்கல் செய்யப்பட உள்ள த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் முத்தான பட்ஜெட்டாக இருக்குமா? என்று தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 17வது சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டம் கடந்த மாதம் (ஜூன்) 18ந் தேதி கவர்னர் உரையுடன் தொடங்கியது.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் ஜூன் 19, 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் நடந்து முடிந்தது. நிறைவு நாளில் முதல்அமைச்சர் ஜோசப் விஜய் பதிலுரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, 4 நாட்கள் நடைபெற்ற சட்டசபை கூட்டத் தொடர் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில், 202627ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காக தமிழக சட்டசபை மீண்டும் கூட இருக்கிறது.

அனேகமாக, இம்மாத இறுதியில், அதாவது ஜூலை 28ந் தேதியோ, அல்லது அடுத்த மாதம் தொடக்கத்தில், அதாவது ஆகஸ்டு 3ந் தேதியோ சட்டசபை கூட்டம் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் நாளில், 202627ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. நிதி அமைச்சர் மரிய வில்சன் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அம்சங்களை பட்டியலிட்டு பேசுவார். அடுத்த நாள், 2026 27ம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. வேளாண் துறை அமைச்சர் வினோத், இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்வார்.

தொடர்ந்து, பட்ஜெட் மீதான விவாதமும், அமைச்சர்களின் பதிலுரையும் இடம்பெறும். அதன் பின்னர், துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறும். மொத்தத்தில், இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் சுமார் 1½ மாதங்கள் நடைபெறும் என்று தெரிகிறது.

தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் இது என்பதால், தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளில் பல்வேறு அறிவிப்புகள் இதில் இடம்பெறும் என்று தெரிகிறது.

த.வெ.க. தேர்தல் அறிக்கையில், "குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2,500 வழங்கப்படும். ஆண்டுக்கு 6 இலவச எல்.பி.ஜி. சிலிண்டர்கள் கொடுக்கப்படும். திருமணத்திற்கு 1 சவரன் தங்கம் மற்றும் பட்டுச்சேலை வழங்கப்படும். ரூ.20 லட்சம் வரை கல்விக்கடன் வழங்கப்படும். குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் மருத்துவ காப்பீடு வழங்கப்படும். ஆண்டுதோறும் இலவச முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படும். வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் ரூ.4 ஆயிரம் வழங்கப்படும்" என்பது உள்பட பல்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன.

ஏற்கனவே, த.வெ.க. தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற, பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் திட்டம் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ந் தேதி தொடங்கப்படும் என்று முதல்அமைச்சர் ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

இதேபோல், தேர்தல் வாக்குறுதிகளில் இடம் பெற்ற 200 யூனிட் மின்சாரம் ஒரு மாதம் வழங்கப்பட்டுள்ளது. ரூ.75ஆயிரம் வரையிலான பயிர் கடனும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அறிவிப்புகளில் முக்கியமானவை பட்ஜெட்டில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, மகளிர் உரிமைத்தொகை ரூ.2,500 ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பை பெண்கள் ஆர்வத்துடன் எதிர்நோக்கியுள்ளனர். என்றாலும், த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் முத்தான பட்ஜெட்டாக இருக்குமா? என்பது சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பிறகே தெரியவரும்.

## குதிரை பேரத்தை தடுக்க வேண்டும் ராஜினாமா செய்யும் எம்எல்ஏக்களை மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும் என மா. கம்யூ. கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் பேட்டி



நாகர்கோயில் லாக்அப் மரணம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருந்தாலும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பது தான் அரசுக்கு நல்ல பெயரை ஏற்படுத்தும் என முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளேன்

குதிரைபேரத்தைதடுக்க வேண்டும் ராஜினாமா செய்யும் எம்எல்ஏக்களை மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் பேட்டி

ஸ்ரீவில்லிபுத்தூர் மேக மலை புலிகள் சரணாலய விவகாரம் தொடர்பாக சென்னை தலைமைச்செயலகத்தில் முதலமைச்சர் விஜய் உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச்செயலாளர் சண்முகம் மற்றும் தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்க தலைவர் டில்லி பாபு உள்ளிட்டோர் சந்தித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த பெ.சண்முகம் பேசியதாவது,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், இன்று முதலமைச்சரை சந்தித்தோம். முதலமைச்சருக்கு எனது பாராட்டு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் தேதி தமிழ்நாடு அரசின் சார்பில் புதிய அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. கரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய நான்கு கிராமங்களில் இருக்கின்ற நிலங்களை கோவில் நிலங்கள் என்று சித்தரித்து கடந்த காலங்களில் பத்திரப்பதிவுத்துறை பதிவு செய்துள்ளது.

இனாம் நிலம் என்றாலே கோவில் நிலம் என்ற தவறான புரிதலை இந்துத்துவா அமைப்புகள், ஆர்எஸ்எஸ் போன்ற அமைப்புகள் தவறான பிரச்சாரத்தை முன் கொண்டு வருகிறார்கள்.

நீதிமன்றத்தின் மூலம் மக்களுக்கு எவ்வளவு இடையூறுகள் செய்ய வேண்டுமோ அவ்வளவு இடையூறுகளை செய்தார்கள். இப்போதும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் மதுரை உயர்நீதிமன்றத்திலும் பல்வேறு வழக்குகள் இது சம்பந்தமாக உள்ளது.

கரூர் கிராமத்தில் நான்கு இனாம் நிலங்களை, கோவில் நிலங்கள் இல்லை என உத்தரவிட்டிருக்கிறது. இதற்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்தார்.

தேனி மாவட்டம் மேகமலை வனப்பகுதி வில்லிபுத்தூர் மேகமலை புலிகள் சரணாலயமாக' அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்குள்ள 98 கிராமங்களைச் சேர்ந்த மக்களை வெளியேற்றுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது கண்டிக்கத்தக்கது. பூர்வகுடிகளை வெளியேற்றக்கூடாது எனவும் வலியுறுத்தி முதலமைச்சரிடம் வலுயுறுத்தி உள்ளோம் என தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் வன உரிமை சட்டம் முழுமையாக அமல்படுத்தப்படாமல் இருக்கிறது.

சட்டம் வந்து 20 ஆண்டுகள் ஆகியும் இதுவரை 34,000 பேருக்கு பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது.

தேனி மாவட்டம் வருசநாடு கடமலைக்குண்டு உள்ளிட்ட இடங்களில் மட்டும் 98 கிராமங்களில் உள்ள மக்களை வெளியே அனுப்ப வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது அதனை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்து இந்த தீர்ப்பை தள்ளி வைக்க வேண்டும் என தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்திற்கு பறைச்சேரி என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஆவணங்களில் பறைச்சேரி என்று நீக்கப்பட்டு, வடக்கு அச்சம் தவிர்த்தான் என்ற பெயரை சேர்ப்பதில் என்ன சிரமம் இருக்கிறது?

இவை அனைத்தையும் முதலமைச்சர் கேட்டார், பறைசேரி என்ற பெயரையும் மாற்ற நடவடிக்கை எடுப்பதாக கூறியிருக்கின்றார் என தெரிவித்தார்.

சேலம் மாநகராட்சிக்கு தண்ணீர் விநியோகிக்கும் உரிமையை சூயஸ் என்ற கம்பெனிக்கு திமுக ஆட்சிக்காலத்தில் ஒப்பந்தம் தள்ளப்பட்டது.

ஏற்கனவே சஒரு தனியார் நிறுவனம் கடந்த நான்கைந்து ஆண்டு காலங்களாக வெளிநாடுகளில் தண்ணீர் வழங்காமல், அந்த கம்பெனியை அடித்து விரட்டினார்கள்.

அப்படிப்பட்ட கம்பெனியிடம் சேலம் மாநகராட்சியின் நீர் உரிமையை தமிழ்நாடு அரசு வழங்கியிருப்பது ஏற்கத்தக்கது அல்ல. 25 வருடங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு உள்ளது.

அவர்கள் எவ்வளவு கட்டணம் ஏற்றுவார்கள் என்ன பராமரிப்பு செய்வார்கள் என்பது குறித்து தெரியவில்லை. குடிநீர் விவகாரத்தை பன்னாட்டு கம்பெனியுடன் வழங்குவது தவறு.

அனுமதி ரத்து செய்ய வேண்டும் என்றும் தெரிவித்து இருக்கின்றோம்., முதலமைச்சர் அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

நாகர்கோயில் கிளை சிறைச்சாலையில் மாற்றுத்திறனாளி கொடூரமான முறையில் தாக்கப்பட்டு சிறை உள்ளேயே மரணம் அடைந்திருக்கின்றார், கொல்லப்பட்டிருக்கின்ற அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்...

## திருவள்ளூர்: இட்லி மாவு வாங்குவது போல் நடித்து பெண் கொடூர கொலை: குற்றவாளி அளித்த அதிர்ச்சி வாக்குமூலம்



பொன்னேரி ஜூலை 16

திருவள்ளூரில் பெண்ணை கொலை செய்தது ஏன்? என குற்றவாளி அளித்த வாக்குமூலம் அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த பழவேற்காட்டில் உள்ள பாபநாரிஷி கோவில் தெருவை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன் (வயது 60). இவர் அதே பகுதியில் மளிகைக் கடை நடத்தி வருகிறார். இவரது மனைவி வனஜா (வயது 55). இவர் வீட்டிலேயே இட்லி மாவு தயாரித்து விற்பனை செய்து வந்தார். நேற்று முன்தினம் காலை ராதாகிருஷ்ணன் வழக்கம்போல் மளிகைக் கடைக்கு சென்று விட்டார். வீட்டில் வனஜா மட்டும் தனியாக இருந்தார்.

சிறிது நேரத்தில் வீட்டிற்கு திரும்பி வந்த ராதாகிருஷ்ணன், வீடு பூட்டப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். கதவை திறந்து உள்ளே சென்று பார்த்தபோது, வனஜா ரத்த வெள்ளத்தில் உயிரிழந்து கிடந்ததை கண்டு கதறி அழுதார்.

இதுபற்றிய தகவல் அறிந்து, திருப்பாலைவனம் போலீசார் சம்பவ இடத்திற்குவிரைந்து சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், கொலை மற்றும் கொள்ளைவழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கினர். அதில், முகமூடி அணிந்தபடி மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர் ஒருவர், வனஜா வீட்டிற்கு வந்து இட்லி மாவு கேட்டுள்ளார். அப்போது, திடீரென தன்னிடம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வனஜாவின் கழுத்தில் குத்தினார்.

இதில் பலத்த காயமடைந்து கீழே சாய்ந்த அவருடைய கழுத்தில் இருந்த தாலி, தாலிச்சரடு, தங்க வளையல்கள் உள்ளிட்ட மொத்தம் 12.5 சவரன் தங்க நகைகளை பறித்து கொண்டார். பின்னர் வீட்டை வெளிப்புறமாக பூட்டிவிட்டு, மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றது தெரியவந்தது.

இது தொடர்பாக சம்பவம் நடந்த வீட்டின் அருகே பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்ததில், கொலையாளி பயன்படுத்திய மோட்டார் சைக்கிளின் பதிவு எண்ணை போலீசார் கண்டுபிடித்தனர். அதைத்தொடர்ந்து பழவேற்காடு குளத்துமேடு பகுதியில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை பிடித்து திருப்பாலைவனம் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று தீவிர விசாரணை நடத்தினர். போலீஸ் விசாரணையில், அவர் ஊத்துக்கோட்டை அருகே பாலவாக்கம் பகுதியை சேர்ந்த யுகேந்தர் என்ற அப்துல் ரகுமான் என்பதும், வனஜாவை திட்டமிட்டு அவர் கொலை செய்ததும் உறுதியானது. போலீசாரிடம் அவர் அளித்த வாக்குமூலத்தில், சென்னையில் மாநகர போக்குவரத்து கழகத்தில் தற்காலிக பஸ் டிரைவராக பணியாற்றி வருகிறேன். காதலித்து திருமணம் செய்து கொண்ட நான், பழவேற்காட்டில் கடந்த 6 ஆண்டுகளாக 7 மாத கர்ப்பிணி மனைவியுடன் வசித்து வருகிறேன்.

அப்பகுதியில் புது வீடு கட்டி வரும் நிலையில் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால், வனஜா வீட்டை நோட்டமிட்டு அவர் வீட்டில் தனியாக இருப்பதை அறிந்து கொண்டு திட்டமிட்டு அவரை கொலை செய்து நகையை திருடிவிட்டு தப்பி சென்றேன் என போலீசாரிடம் அவர் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அப்துல் ரகுமான் மீது கொலை மற்றும் கொள்ளை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். மேலும், அவரிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட 12.5 பவுன் தங்க நகைகளை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

## பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124வது பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்சி பிரிவு சார்பில் 124 கிலோ கேக் வெட்டி கொண்டாடப்பட்டது



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124வது பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்சி பிரிவு சார்பில் 124 கிலோ கேக் வெட்டி கொண்டாடப்பட்டது

சென்னை ராயப்பேட்டையில் உள்ள சத்தியமூர்த்தி பவனில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்சி பிரிவு சார்பில் பெருந்தலைவர்காமராஜர் அவர்களின் 124வது பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி 124 கிலோ கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கேரளம் மாநில உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னிதலா, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மூத்த தலைவர்கள் கேவி தங்கபாலு பீட்டர் அல்போன்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், மாநிலங்களவை உறுப்பினர் பிரவீன் சக்கரவர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து 124 கிலோ கேக் வெட்டி கொண்டாடி தொடர்ந்து மதிய உணவுகளை பரிமாறினர். மேலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக "லஞ்சம் தவிர் நஞ்சம் நிமிர்" என்ற மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

தங்களது கை தடங்களை பதாகையில் பதித்து இயக்கத்தை காங்கிரஸ் நிர்வாகிகள் தொடங்கி வைத்தனர்.

## கள்ளக்குறிச்சி: தொழிலாளி வீட்டில் பெட்ரோல் குண்டு வீச்சு; 4 பேர் கைது

கள்ளக்குறிச்சி, ஜூலை 16

கள்ளக்குறிச்சி அருகே உள்ள ஒரு தொழிலாளி வீட்டில் பெட்ரோல் குண்டு வீசிய 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

கள்ளக்குறிச்சி அருகே அகரக்கோட்டாலம் கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளி அந்தோணிசாமி (வயது 28). இவருக்கும் சிறுவங்கூரைச் சேர்ந்த பாலகிருஷ்ணன்(33) என்பவருக்கும் கடந்த 7ந்தேதி டீக்கடையில் வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது பாலகிருஷ்ணனும் அவரது நண்பர்களும் சேர்ந்து அந்தோணிசாமியைத் தாக்கியுள்ளனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த பாலகிருஷ்ணன், நேற்று அதிகாலை தனது நண்பர்கள் 3 பேருடன் சேர்ந்து அந்தோணிசாமியின் வீட்டிற்கு சென்று பெட்ரோல் குண்டுகளை வீசி உள்ளார். இதில் வீட்டின் முன்பக்க கதவு தீப்பிடித்து எரிந்து சேதமடைந்தது. இதுகுறித்த புகாரின் பேரில் இந்த சம்பவத்தில் தொடர்புடைய பாலகிருஷ்ணன் உள்பட 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

## வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் 'தூத்துக்குடி கருவாடு'

தூத்துக்குடி, ஜூலை 16

தூத்துக்குடியில் இருந்து வெளிநாடுகளுக்கு கப்பல்கள் மூலம் கருவாடு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தூத்துக்குடியில் கருவாடு உற்பத்தி மற்றும் விற்பனை குறித்து மீனவர்கள் கூறுகையில், "பொதுவாக நெத்திலி, சாளை, சீலா, பாறை போன்ற மீன்கள் மூலம் கருவாடு உற்பத்தி செய்கிறோம். நல்ல மீன்களை தேர்வு செய்து, அவற்றில் உள்ள குடல் மற்றும் தேவையற்ற பகுதிகளை நீக்குவோம். அதன் பிறகு தேவையான அளவு உப்பு சேர்த்து சில மணி நேரம் முதல் ஒரு நாள் வரையிலும் ஊற வைப்போம். உப்பானது மீன்களை பாதுகாப்பதுடன் சுவையூட்டுகின்றன. உப்பு ஊறிய மீன்கள் சுத்தமான உலர்த்தும்தளங்களில்பரப்பி, பலநாட்கள்நன்கு வெயிலில் உலர்த்துவோம். போதுமான அளவு ஈரப்பதம் நீங்கிய பிறகு கருவாட்டின் தரத்தை பரிசோதித்து விற்பனைக்கு அனுப்புகிறோம். இதன் மூலம் ஆயிரக்கணக்கான மீனவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது" என்றனர்.

தற்போது மீன்களை ரகம் வாரியாக தரம் பிரித்து, சுத்தம் செய்து, உப்பு கலந்து வெயிலில் காய வைக்கும் பணியில் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். வெயில் கொளுத்துவதால்மணமணக்கும்இதுதவிரஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, துபாய், கத்தார், பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகளுக்கும் அதிகளவில் ஏற்றுமதியாகிறது.

மருத்துவ குணம் கொண்ட கருவாடுகளுக்கு அதிக கிராக்கி உள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் ஆர்வமுடன் கருவாடுகளை கொள்முதல் செய்கின்றனர். வெளிநாட்டினரும் நம்ம ஊரு கருவாடுகளை அதிகம் விரும்புகின்றனர். வியாபாரிகளும் போட்டி போட்டு வாங்கி செல்வதால் மீனவர்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# காமராஜரின் புகழ் தமிழ்நாடுள்ள மட்டும் நிலைத்திருக்கும்: மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை, ஜூலை 16

கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜரின் புகழ் தமிழ்நாடுள்ள மட்டும் நிலைத்திருக்கும் என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளையொட்டி தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டின் கல்வி, தொழில், வேளாண் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைத்த பெருந்தலைவர்காமராஜர் பிறந்தநாளில் அவருக்கு என் புகழ்வணக்கம்!



மாற்று இயக்கத்தில் இருந்தாலும் தந்தை பெரியாரால் பச்சைத் தமிழர் எனப் பாராட்டப்பட்டு, அவரது எண்ணங்களைச் செயல்படுத்தியவர் காமராஜர். பேரறிஞர் அண்ணாவால் பெரிதும் மதிக்கப்பட்டவர். நெருக்கடி நிலையை அறிவித்த போது அதை எதிர்த்து முத்தமிழறிஞர் கலைஞருக்கு ஆதரவாகநின்றவர். உடல்நிலை சரியில்லாதபோதும் எனது திருமணத்துக்கு நேரில் வந்து வாழ்த்திய பெருந்தகையாளர்.

காமராஜர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அவரது வழியிலான நமது திராவிட மாடல் அரசிலும், காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்துக்கு முக்கியக் காரணமாக அமைந்த காமராஜருக்கு திருவுருவச் சிலை,

திருச்சியில் உலகத்தரத்தில் தயாராகி வரும் மாபெரும் நூலகத்துக்கு காமராஜர் பெயர் எனப் பெருந்தலைவரின் புகழ் போற்றும் அரசினை நடத்தினோம்! தலைமுறைகள் தழைக்க கல்விக்கண் திறந்த கர்மவீரரின் புகழ் தமிழ்நாடுள்ள மட்டும் நிலைத்திருக்கும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அரசு கலைக்கல்லூரிகளில் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு பணியிட மாறுதல் கலந்தாய்வு இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூலை 16

முதல்அமைச்சரின் வழிகாட்டுதலின்படி, உயர்கல்வித்துறையின் கீழுள்ள கல் லூரிக்கல்வி இயக்ககம், அனைத்து மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்ககங்கள், அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லா பணியாளர்களின் ('டி' பிரிவு தவிர்த்து) நலன்கருதி 202627ம் ஆண்டு பணியிட மாறுதலுக்கான பொதுகலந்தாய்வு நடத்த ஆணையிடப்பட்டு உள்ளது. அதன்படி, உயர்கல்வித்துறையின் கீழ் இயங்கும் கல்லூரிக்கல்வி இயக்ககம், அனைத்து மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்ககங்கள், அரசு கலை, அறி வியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லா பணியாளர் கள் 'டி' பிரிவு தவிர்த்து) 202627ம் ஆண்டு பணியிட மாறுதலுக்கான பொது இடமாறுதல் கலந்தாய்வுக்கு 15ந்தேதி முதல் 24 ந்தேதி வரை

இணையவழி வாயிலாக விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த பொது கலந்தாய்வில் கலந்துகொள்ள ஆசிரியரல்லாப் பணியாளர்கள் ('டி'பிரிவு தவிர்த்து) www.nonteaching.dcetransfer.in என்ற இணையதள முகவரியில், விண்ணப்பித்து பயன்பெற வேண்டும். மேற்கண்ட தகவல் உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிறந்த நாள் கொண்டாடியதை பெற்றோர் கண்டித்ததால் விரக்தி பிளஸ்2 மாணவி எடுத்த விபரீத முடிவு

வேலூர், ஜூலை 16

வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா அடுத்த இறைவன்காடு பகுதியை சேர்ந்தவர் திருநாவுக்கரசு. இவருடைய மூத்த மகள் காவியா பொய்கை அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார். நேற்று முன்தினம் காவியாவிற்கு பிறந்தநாள் என்பதால் பல்வேறு இடங்களுக்கு சென்று நண்பர்களுக்கு இனிப்புகளை வழங்கி கொண்டாடி வந்தார்.

இது சம்பந்தமாக பெற்றோர்கள் காவியாவை கண்டித்ததாக கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த காவியா நேற்று பள்ளிக்கு செல்லாமல் வீட்டில் தனியாக இருந்துள்ளார். திருநாவுக்கரசு மற்றும் அவரது மனைவி ஜோதி லட்சுமி மற்றும் 2 பெண் குழந்தைகளும் வெளியே சென்றிருந்தனர். இந்த நேரத்தில் வீட்டில் தனியாக இருந்த காவியா மின் விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். வீடு திரும்பிய திருநாவுக்கரசு மகள் காவியா தூக்கில் தொங்கியதை கண்டு அதிர்ச்சி அடைந்து கூச்சலிட்டார். அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து காவியாவை தூக்கில் இருந்து மீட்ட போது அவர் இறந்து விட்டது தெரிய வந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் பள்ளிகொண்டா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து திருநாவுக்கரசு கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து காவியா தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பிளஸ் 2 மாணவி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# நாகர்கோவில் சிறையில் மாற்றுத்திறனாளி கொலை: சிபிஐ விசாரணைக்கு ஆணையிட வேண்டும் அன்புமணி

சென்னை, ஜூலை 16

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பெட்டிக்கடையில் போதைப்பாக்குகளை விற்பனை செய்ததற்காக நாகர்கோவில் கிளைச்சிறையில் அடைக்கப்பட்டிருந்த மாற்றுத்திறனாளி, சிறைக்காவலர்களால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. விசாரணைக் கைதி உயிரிழந்தது தெரிந்தும் அதை மூடி மறைக்க முயன்றதாகவும், உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அவை உண்மை எனில் காவல்துறை, சிறைத்துறையின் செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கவை.

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தை அடுத்த ஈத்தங்காடு கிராமத்தைச் சேர்ந்த சபரிநாதன் என்ற உடற்திறன் மாற்றுத்திறனாளி, அவர் நடத்தி வந்த பெட்டிக்கடையில் 200 கிராம் குட்கா எனும் போதைப்பாக்கை சட்ட விரோதமாக வைத்திருந்ததாகக் கூறி கடந்த 9ம் தேதி கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் நேர் நிறுத்தப்பட்ட அவர், உடல்நலம் பாதிக்கப்பட்டதாகக் கூறி நேற்று முன்நாள் திங்கள்கிழமை ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், மருத்துவம் பயனின்றி சபரிநாதன் உயிரிழந்த நிலையில், அவர் மாரடைப்பால் தான் உயிரிழந்து விட்டதாகக் கூறி மூடி மறைக்க காவல்துறையினர் முயன்றதாக கூறப்படுகிறது.

ஆனால், சபரிநாதன் இறப்பில் மர்மம் இருப்பதாகவும், அவரை சிறைக் காவலர்கள் கொலை செய்து விட்டு, அதை மூடி மறைக்க முயல்வதாகவும் குற்றஞ்சாட்டி அப்பகுதி மக்கள் போராட்டங்களை நடத்தினர். அதைத் தொடர்ந்து நீதிபதி முன்னிலையில் நடத்தப்பட்ட உடற்கூராய்வில் சபரிநாதனின் உடலில் 19 காயங்கள் இருந்ததும், குறைபாடுள்ள வலது கை 3 இடங்களில் உடைக்கப்பட்டிருந்ததும், இடது கை, இரு கால்கள், தலை, மார்பு ஆகிய உறுப்புகளும் கொடூரமாகத் தாக்கி காயப்படுத்தப்பட்டிருப்பதும் தெரிய வந்தது. அதன் பிறகு தான் இதற்கு காரணமான நாகர்கோவில் தலைமை சிறைக்காவலரும், இரு சிறைக்காவலர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

நாகர்கோவில் சிறையில் சபரிநாதனுக்கு இழைக்கப்பட்ட கொடூரம் மன்னிக்க முடியாதது. சிறைக்காவலர்களை கோபப்படுத்தும் வகையில் கூட அவர் எதுவும் செய்யவில்லை. ஒரு தவறும் செய்யாத என்னை எதற்காக சிறையில் அடைத்து வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டு அவர் தொடர்ந்து ஓலமிட்டிருக்கிறார். அதனால் ஆத்திரமடைந்த சிறைக்காவலர்கள் அவரது கைகள் மற்றும் கால்களைக் கட்டி, படுக்க வைத்து கொடூரமாக தாக்கியதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. தாக்குதலில் காயமடைந்த சபரிநாதன் ஞாயிற்றுக்கிழமை இரவே இறந்து விட்டதாக கூறப்படும் நிலையில் அவரை திங்கள்கிழமை காலை உயிருடன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்குதான் அவர் உயிரிழந்து விட்டதாகவும் சிறைத்துறையினர் ஒரு நாடகத்தை எழுதி அரங்கேற்றியுள்ளதாக கொல்லப்பட்டவரின் குடும்பத்தினரும், உறவினர்களும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சபரிநாதன் உயிரிழந்த பிறகும் கூட அவர் இயற்கையாகவே மரணமடைந்ததைப் போலவும், அவரது மறைவுக்கும் சிறைத்துறையினரின் தாக்குதலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்த காவல்துறையும், சிறைத்துறையும் முயன்றதாக கூறப்படுகிறது. இறந்து போன சபரிநாதனின் உடலை உடனே வாங்கிச் சென்று தகனம் செய்யவும் உறவினர்களுக்கு காவல்துறை அழுத்தம் கொடுத்ததாக குற்றஞ்சாட்டப் படுகிறது. ஆனால், அதற்கு குடும்பத்தினர் உடன்பட மறுத்து போராடியதால் தான், தாமதமானாலும் கூட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைத்துள்ளது. இல்லாவிட்டால் இந்தக் கொலை மூடிமறைக்கப்பட்டிருக்கும்.

அதிமுக ஆட்சியில் சாத்தான்குளம் பெனிக்ஸ், ஜெயராஜ், திமுக ஆட்சியில் மடப்புரம் அஜித்குமார் வரிசையில் தவெக ஆட்சியில் சபரிநாதனின் படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளது. தொடக்கத்திலிருந்தே இந்த கொலையை மூடி மறைக்க முயற்சிகள் நடந்த நிலையில், தமிழக காவல்துறையினர் விசாரித்தால் இந்த வழக்கில் நீதி கிடைக்காது. எனவே, சாத்தான்குளம், மடப்புரம் வழக்கின் விசாரணைகள் எவ்வாறு சிபிஐக்கு மாற்றப்பட்டனவோ? அதேபோல், இந்த வழக்கும் சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட வேண்டும். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சிறைக் காவலர்களுக்கு வழக்கின் விசாரணை முடியும் வரை பிணை மறுக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கு பிந்தைய இரு மாதங்களில் காவல்துறையினரின் காவலில் இருந்த 4 பேர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர். அதற்கான காரணங்களை கண்டறியவும் விசாரணைக்கு ஆணையிட வேண்டும். கொடூரமாக கொல்லப்பட்ட சபரிநாதனின் குடும்பத்தினருக்கு ரூ.50 லட்சம் இழப்பீடும், அவரது மனைவிக்கு அரசு வேலையும் வழங்கவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# லாக்கப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்: பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 16

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் சாமிதோப்பு அருகே உள்ள ஈத்தன்காடு பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சபரிவர்மன் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்கள் விற்றதாகக் கூறி ஜூலை 9 அன்று தென்தாமரைக்குளம் போலீசாரால் கைது செய்யப்பட்டார். ஜூலை 13 அன்று காலை சிறையில் அவர் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

கைதானபோது நல்ல ஆரோக்கியத்துடன் இருந்த மாற்றுத்திறனாளி இளைஞர் உயிரிழந்திருப்பது பெரும் அதிர்ச்சியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும், அவரது உடற்கூறு பரிசோதனையில் அவரது உடலில் 19 இடங்களில் காயங்கள் இருந்ததாகத் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்றுகாவல்துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



ஏற்கனவே தமிழகத்தில் பல லாக்கப் படுகொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ள நிலையில், மீண்டும் இதுபோன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பது தமிழ்நாடு முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்த விவகாரத்தில் 3 காவல்துறையினரை பணியிடை நீக்கம் செய்திருப்பது மட்டுமே போதுமான தீர்வாகாது. இனி தமிழகத்தில் எங்கும் லாக்கப் படுகொலைகள் நடைபெறாத வகையில் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்டத்தை மீறியவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் நீதித்துறைக்கு மட்டுமே உள்ளது. சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு ஒருவரின் உயிரைப் பறிக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. மாற்றம் என்று கூறி ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த அரசு, இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதன் மூலம் எந்தவிதமான மாற்றத்தையும் மக்களிடம் ஏற்படுத்தவில்லை என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

எனவே, காவல்துறையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தமிழக முதல்அமைச்சர், இந்தக் கொடூரமான குற்றத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது எந்தவித பாரபட்சமும் இன்றி அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், உயிரிழந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும், ரூ.25 லட்சம் நிவாரணத் தொகையையும் தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் கபடி வீராங்கனைக்கு பாலியல் தொல்லை: பயிற்சியாளர் கைது

சென்னை, ஜூலை 16

சென்னை அருகே கண்ணகி நகரில் கபடி பயிற்சியாளராக இருப்பவர் ராஜூ (34). இவர், மீது கண்ணகி நகர் குடிசைமாற்று வாரியக் குடியிருப்பில் வசிக்கும் ஒரு கபடி வீராங்கனை, செம்மஞ்சேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்தார்.

அதில் ராஜூ தனக்கு பாலியல் தொல்லை அளித்து மிரட்டியதாகவும், பின்னர் தனது வீட்டில் தாய் இல்லாத நேரத்தில் 3 முறை வந்த ராஜூ, பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாகவும், தன்னைபோன்று பல மாணவிகள் அவரால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், ராஜூ மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படியும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த புகாரின் அடிப்படையில் பயிற்சியாளர் மீது குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட 3 பிரிவுகளின்கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதனையடுத்து அவர் தலைமறைவானார். அவரை கைது செய்ய தனிப்படை போலீசார் வலைவீசி தேடி வந்தனர்.

இந்த நிலையில், கபடி வீராங்கனைக்கு பாலியல் தொல்லை கொடுத்த பயிற்சியாளர் ராஜூ கைது செய்யப்பட்டுள்ளார்.



கொடைக்கானலில் பதுங்கியிருந்த ராஜூவை தனிப்படை போலீசார் கைது செய்து சென்னை அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசு அலுவலகங்களில் லஞ்சம் கேட்டால் புகார் அளிக்க வாட்ஸ்அப் எண் அறிமுகம்

சென்னை, ஜூலை 16

தமிழகத்தில் உள்ள அரசு அலுவலகங்களில் யாரேனும் லஞ்சம் கேட்டால், அது தொடர்பாக பொதுமக்கள் புகார் அளிக்க வாட்ஸ்அப் உதவி எண்ணை தமிழக அரசு அறிமுகம் செய்து உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக தலைமைச் செயலாளர் சாய் குமார் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில்,




"தமிழகத்தில் லஞ்சம் வாங்கப்பட்டால் அது தொடர்பாக பொதுமக்கள் புகார்அளிக்க 9498180936 என்ற எண் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அனைத்து அரசு துறைகளின் இணையதளத்திலும் இந்த வாட்ஸ்அப் எண் இடம்பெற வேண்டும் என்றும், அதனுடன் லஞ்ச ஒழிப்பு துறையின் இணையதளத்தின் இணைப்பும் இடம்பெற வேண்டும் என்றும்" அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# 3வது மொழித் தேர்வு தேர்ச்சி: மறைமுக மொழித் திணிப்பா..? திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் கண்டனம்

சென்னை, ஜூலை 16

சிபிஎஸ்இ சுற்றறிக்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று திமுக கல்வியாளரணிச் செயலாளர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:



தேசிய கல்விக் கொள்கை (NEP 2020) என்ற பெயரில், 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்கள் மூன்றாவது மொழிக்கான பள்ளி அளவிலான உள் மதிப்பீட்டுத் தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற்றால்தான் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் பெற முடியும் என்ற வகையில் சிபிஎஸ்இ வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கை கடும் கண்டனத்திற்குரியது.

மூன்றாவதுமொழியை "விருப்பம்" என்ற பெயரில் அறிமுகப்படுத்திவிட்டு, பின்னர் அதனைத் தேர்ச்சி பெற வேண்டிய கட்டாய நிபந்தனையாக மாற்றுவது, மறைமுக மொழித் திணிப்பு அல்லாமல் வேறு என்ன? இது போன்ற நடவடிக்கைகள் தேசிய கல்விக் கொள்கையின் உண்மையான நோக்கம் கல்விச் சீர்திருத்தமா அல்லது மொழித் திணிப்பா என்ற நியாயமான கேள்வியை எழுப்புகின்றன.

"இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்; இருமொழிக் கொள்கையை என்றும் காப்போம்" என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிலைப்பாடு, தமிழ்நாட்டின் மொழி உரிமைக்கான அடித்தளமாகும். அந்தக் கொள்கையை ஆட்சியிலும், அரசியலிலும் உறுதியாகக் காத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதே பாதையில், தமிழ்நாட்டின் மொழி உரிமை, மாநில உரிமை மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தை பாதுகாக்கும் உறுதியுடன் தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார். தி.மு.கவின் நிலைப்பாடு தெளிவானது. இருமொழிக் கொள்கையில் எந்தவித சமரசத்திற்கும் இடமில்லை.

கல்வி என்பது மாணவர்களின் திறனை வளர்க்கும் உரிமை. அதை மொழித் திணிப்புக்கான கருவியாக மாற்றுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. மாநிலங்களின் கல்வி மற்றும் மொழிக் கொள்கைகளில் ஒன்றிய அரசு தொடர்ச்சியாக தலையிட முயல்வது, இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான செயலாகும்.

தமிழ்நாடு பலமுறை தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய பிறகும், புதிய புதிய வடிவங்களில் மூன்றாவது மொழியை கட்டாயப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் புறக்கணிக்கும் செயலாகும். எனவே, சிபிஎஸ்இ வெளியிட்டுள்ள இந்த சுற்றறிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். தேசிய கல்விக் கொள்கையின் பெயரில் எந்தவிதமான நேரடி அல்லது மறைமுக மொழித் திணிப்பையும் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா காட்டிய வழியில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் காத்த கொள்கையில், மதிப்பிற்குரிய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டின் மொழி உரிமையையும் இருமொழிக் கொள்கையையும் பாதுகாக்கும் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் உறுதியாக நிற்கும். இருமொழிக் கொள்கையை காப்போம்! தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவோம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

16.07.2026

# தூத்துக்குடியில் கல்லால் தாக்கி வாலிபர் கொலை: 2 பேர் கைது

தூத்துக்குடி, ஜூலை 16

தூத்துக்குடி அண்ணாநகரில் முன்விரோதம் காரணமாக கல்லால் தாக்கப்பட்ட வாலிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, இவ்வழக்கை கொலை வழக்காக மாற்றி தென்பாகம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தூத்துக்குடி அண்ணாநகர் 8வது தெருவைச் சேர்ந்த மாரிமுத்து மகன் கருப்பசாமி (வயது 33). இவர் அங்குள்ள தோழி இறைச்சி கடையில் வேலை செய்து வந்தார். கருப்பசாமிக்கும் அண்ணாநகர் 9வது தெருவைச் சேர்ந்த முருகன் மகன் வெங்கடேஷ்(24) என்பவருக்கும் மது அருந்துவது தொடர்பாக ஏற்கனவே தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக வெங்கடேஷ், கருப்பசாமியை கொலை செய்துவிடுவதாக எச்சரித்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த 9ம் தேதி இரவில் அண்ணாநகர் 8வது தெருவில் கருப்பசாமி நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த வெங்கடேஷ் மற்றும் அவருடைய நண்பரான முனியசாமி மகன் அரவிந்தன்(21) ஆகிய 2 பேரும் கருப்பசாமியிடம் மீண்டும் தகராறில் ஈடுபட்டுள்ளனர். தகராறு முற்றிய நிலையில், அருகில் கிடந்த கல்லை எடுத்து கருப்பசாமியின் தலையில் சரமாரியாகத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தலையில் பலத்த காயமடைந்த கருப்பசாமியை, 108 ஆம்புலன்ஸ் மூலம் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி கருப்பசாமி உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து தென்பாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் திருமுருகன் முதலில் கொலை முயற்சி வழக்காக பதிவு செய்து வெங்கடேஷ், அரவிந்தன் ஆகிய 2 பேரை கைது செய்து பேரூரணி சிறையில் அடைத்திருந்தார். தற்போது கருப்பசாமி உயிரிழந்ததைத் தொடர்ந்து, இவ்வழக்கை கொலை வழக்காக மாற்றி இன்ஸ்பெக்டர் திருமுருகன் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்.

# ஜே.இ.இ. தேர்வில் தோல்வி அடைந்ததால் விரக்தி மாணவர் எடுத்த விபரீத முடிவு

நாகர்கோவில், ஜூலை 16

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே உள்ள பணிக்கன்குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன் (59 வயது). இவர் திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அலுவலகத்தில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறார். இவருடைய மனைவி கீதா, நாகர்கோவிலில் உள்ள பொதுப்பணித்துறையில் ஊழியராக பணிபுரிந்து வருகிறார்.

இந்த தம்பதிக்கு 2 மகன்கள். ஒரு மகன் இருந்தனர். மூத்த மகள் அபிநயா வெளியூரில் தங்கி வேலை பார்த்து வருகிறார். இன்னொரு மகள் ஆர்த்தி வெளியூரில் படித்து வரும் நிலையில், கடைசி மகன் கோகுல் (19 வயது) கன்னியாகுமரி பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் பிளஸ்2 முடித்திருந்தார்.

அதன் பிறகு ஜே.இ.இ. முதல் நிலை தேர்வுக்கு தீவிரமாக படித்து வந்தார். மேலும் இந்த ஆண்டு நடந்த ஜே.இ.இ. தேர்விலும் பங்கேற்று எழுதினார். சமீபத்தில் தேர்வு முடிவு வெளியான நிலையில், அதில் கோகுல் தோல்வி அடைந்திருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு மின்விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். ஜே.இ.இ. முதல் நிலை தேர்வில் தோல்வி அடைந்ததால் மாணவர் இந்த விபரீத முடிவை எடுத்ததாக போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது.

# இன்றைய ராசி பலன்கள் (16.07.2026)

**மேஷம்** — உங்களது அழகான தோற்றமும் பேச்சும் மற்றவர்களை எளிதில் ஈர்க்கும். பணியிடத்தில் நீங்கள் செய்யும் கடின உழைப்பு எதிர்காலத்தில் பெரிய பலனைத் தரும். தேவையற்ற பண விரயங்களைத் தவிர்க்க இன்று செலவுகளில் கொஞ்சம் கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.

**ரிஷபம்** — நீண்ட நாட்களாகத் தள்ளிப்போன காரியங்கள் இன்று சாதகமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் அல்லது புதிய வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடித்தால் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழலைத் தக்க வைக்கலாம்.

**மிதுனம்** — வேலைப்பளு சற்று அதிகமாகத் தோன்றினாலும், உங்கள் உழைப்பிற்கேற்ற நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய முதலீடுகளைத் திட்டமிடும்போது ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுக்கவும்.

**கடகம்** — குடும்பத்தில் மகிழ்ச்சியான மற்றும் சுப நிகழ்ச்சிகள் பற்றிய பேச்சுகள் வரலாம். வீடு, நிலம் சார்ந்த சொத்து விவகாரங்களில் சாதகமான திருப்புமுனை ஏற்படும். மன அமைதியும் தைரியமும் கூடும் நாளாக அமையும்.

**சிம்மம்** — உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் அல்லது பதவி உயர்வுக்கான அறிகுறிகள் தென்படும். நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் ஆதரவு உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும். வாகனப் பயணங்களின் போது கவனமாக இருப்பது அவசியம்.

**கன்னி** — பொருளாதார நிலை உயரும், பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நீங்கள் போடும் புதிய திட்டங்கள் வெற்றியைத் தரும். உறவினர்களுடனான கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை பலப்படும்.

**துலாம்** — இன்று நீங்கள் எதையும் சாதிக்கும் துணிச்சலோடு செயல்படுவீர்கள். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள், அதற்குரிய பலனும் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** — சந்திராஷ்டமம் இன்று உங்கள் ராசிக்கு சந்திராஷ்டமம் இருப்பதால் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய நாள். புதிய தொழில் முதலீடுகள், முக்கிய ஒப்பந்தங்கள் மற்றும் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது தேவையற்ற வாக்குவாதங்களை எக்காரணம் கொண்டும் வளர்க்க வேண்டாம்.

**தனுசு** — உங்களது முயற்சிகளுக்கு இருந்த தடைகள் அனைத்தும் விலகும். கடன் தொல்லைகள் குறைந்து நிம்மதி ஏற்படும். குடும்ப உறுப்பினர்களுடன் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி, இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

**மகரம்** — குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் ஆதரவும் ஆசியும்உங்களுக்குக்கிடைக்கும்.பணியிடத்தில் சவாலான வேலைகளையும் உங்கள் சமயோசித புத்தியால் எளிதாக முடிப்பீர்கள். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** — தொழிலில் நல்ல முன்னேற்றமும், கீழ்நிலை ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அரசாங்க வழியில் எதிர்பார்த்த உதவிகள் சாதகமாக முடியும். ஆரோக்கியத்தில் சிறு கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்** — வாக்கு வன்மையால் பல காரியங்களை இன்று சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களோடு இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

# வாக்காளர்களுக்கு பிரிட்ஜ் கூப்பன் சி.விஜயபாஸ்கருக்கு நோட்டீஸ்

சென்னை, ஜூலை 16

நடந்த முடிந்த தமிழக சட்டசபை தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை தொகுதியில் அதிமுக வேட்பாளராக போட்டியிட்ட சி.விஜயபாஸ்கர், 1,05,773 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தவெக வேட்பாளர் முருகேசனை விட 62,073 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

இதனையடுத்து சி.விஜயபாஸ்கர் வெற்றி பெற்றதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் திமுக சார்பில் போட்டியிட்டு தோல்வியுற்ற கே.கே.செல்லபாண்டியன் தேர்தல் வழக்கு தொடர்ந்தார். அதில், வெற்றி பெற்ற சி. விஜயபாஸ்கர் தேர்தல் பிரச்சாரத்தின்போது வாக்காளர்கள் தனக்கு ஆதரவாக வாக்களிக்க கூறி ரூ.10,000 மற்றும் ரூ.2,000க்கான கூப்பன்களை விநியோகித்தார். வாக்காளர்கள் பிரிட்ஜ் வாங்க கூப்பன்களை விநியோகித்து தேர்தல் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார். எனவே சி.விஜயபாஸ்கர் வெற்றியை செல்லாது என அறிவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த வழக்கு இன்று நீதிபதி என் செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு கூப்பன்களை வழங்கி முறைகேட்டில் ஈடுபட்டதை மனுதாரர் சுட்டிக்காட்டி பதிவு செய்தார். மேலும் வழக்கு குறித்து சி.விஜயபாஸ்கர் மற்றும் தேர்தல் ஆணையம் பதிலளிக்குமாறு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை மூன்று வாரத்திற்கு தள்ளி வைத்தார்.தற்பொழுது சி. விஜயபாஸ்கர் தன்னுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் எ.வ.வேலு ஆஜர்



சென்னை, ஜூலை 16

தி.மு.க. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மீது நெடுஞ்சாலை துறையில் ரூ.3.23 கோடி முறைகேடு நடந்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கு தொடர்பாக கடந்த 3ந் தேதி லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டு இருந்தது.

ஆனால் சிங்கப்பூர் சென்று இருந்த எ.வ.வேலு, அங்கு உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்றுவந்தார். அவருக்கு எதிராக 'லுக் அவுட்' நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் சென்னை ஐகோர்ட்டு, நிபந்தனையுடன் இடைக்கால தடை விதித்துள்ளதுடன், 15ந்தேதி லஞ்ச ஒழிப்புத்துறை முன்பு ஆஜராகவும் உத்தரவிட்டது. இந்த நிலையில், ஐகோர்ட்டு உத்தரவின்படி, சென்னை ஆலந்தூரில் உள்ள லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் திமுக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு இன்றும் ஆஜராகியுள்ளார். அவரிடம் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருமணம் செய்ய மறுத்த இளம்பெண் மீது தாக்குதல்.. தடுக்க முயன்ற பெண்ணின் தாயார் வெட்டிக்கொலை வாலிபர் வெறிச்செயல்



விருதுநகர், ஜூலை 16

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே கல்குறிச்சியில் வீடு புகுந்து இளம்பெண் மீது வாலிபர் ஒருவர் அரிவாளால் தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

காரியாபட்டி அருகே கல்குறிச்சியில் வர்ஷா என்பவருக்கும் அவரது உறவினர் யுவராஜாவிற்கும் சில மாதங்களுக்கு முன்பு திருமணம் நிச்சயிக்க ப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் யுவராஜாவை வர்ஷா மணம் முடிக்க மறுத்துவிட்டதால் திருமணம் நிறுத்தப்பட்டது. இதனால் தன்னை திருமணம் செய்ய மறுத்த வர்ஷாவை வீடு புகுந்து யுவராஜா இன்று வெட்டியதாக கூறப்படுகிறது.

மகள் வெட்டப்படுவதை பார்த்து அதனை தடுக்க வந்த வர்ஷாவின் தாய் விநாயக ஜோதி மீதும் யுவராஜா கொடூரமாக அரிவாளால் வெட்டியதில் வர்ஷாவின் தாயார் விநாயக ஜோதி சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

யுவராஜால் அரிவாளால் வெட்டப்பட்ட வர்ஷா படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். கொலை செய்துவிட்டு தப்பி ஓடிய யுவராஜ், மல்லாங்கிணறு காவல்நிலையத்தில் சரணடைந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச ஸ்குவாஷ் போட்டி: அரையிறுதியில் இந்திய வீராங்கனை சான்யா தோல்வி



இந்திய ஸ்குவாஷ் ராக்கெட் சம்மேளனம் சார்பில் பி.எஸ்.ஏ. சேலஞ்சர்ஸ் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி சென்னை நேரு பார்க்கில் உள்ள இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை சான்யா வாட்ஸ் 4-11, 2-11, 5-11 என்ற நேர்செட்டில் எகிப்தின் ரோக்யா ஒத்மேனிடம் தோற்று நடையை கட்டினார்.

மற்றொரு அரையிறுதியில் தென்கொரியா வீராங்கனை ஹவாயோங் 11-9, 9-11, 2-11, 11-4, 11-6 என்ற செட் கணக்கில் எகிப்து வீராங்கனை ஹனா அலாடினை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மலேசியாவின் ஜோசிம் சுயா 8-11, 10-12, 11-5, 12-10, 12-10 என்ற செட் கணக்கில் சக நாட்டு வீரர் முகமது சைபிக் கமாலை வெளியேற்றி இறுதிப் போட்டியை எட்டினார். இன்னொரு அரையிறுதியில் எகிப்து வீரர் ஆதம் ரோஷ்டி 12-10, 11-5, 11-7 என்ற நேர்செட்டில் சலா எல்டோர்க்மேனை (கனடா) விரட்டியடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். இன்று பகல் 12 மணிக்கு இறுதிப்போட்டி நடக்கிறது.

# பிரான்சை வீழ்த்திய ஸ்பெயின் அணி; மீண்டும் ஒரு கனவு நனவானது: பிரதமர் வாழ்த்து

பிரான்ஸ் அணியை அரையிறுதியில் வீழ்த்தி, ஸ்பெயின் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ளது.

உலகக்கோப்பை கால்பந்து போட்டி தொடர் பரபரப்பான இறுதி கட்டத்திற்கு சென்றுள்ளது. அரையிறுதி போட்டி ஒன்றில், ஸ்பெயின் அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறி இருக்கிறது. இதற்கு, ஸ்பெயின் அணியின் பிரதமர் வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

அவர் வெளியிட்ட எக்ஸ் சமூக ஊடக பதிவில், இறுதிப்போட்டிக்கு முன்னேறியது அதிக உற்சாகம் தருகிறது. ஸ்பெயின் கால்பந்து அணி, மீண்டும் ஒரு கனவை உருவாக்கி உள்ளது. அணி வீரர்களே முன்னேறுங்கள் என அவர் பதிவிட்டு உள்ளார்.

அதற்கு முன்பு, அமெரிக்காவின் டல்லாஸ் ஸ்டேடியத்தில் நடந்த அரையிறுதி போட்டியில் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் அணிகள் விளையாடின.

போட்டியின் முதல் பாதியில் 22வது நிமிடத்தில் ஸ்பெயின் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதனை பயன்படுத்தி ஸ்பெயின் வீரர் மிகெல் ஒயார்சபால் கோல் அடித்தார். இதனால் ஸ்பெயின் அணி 10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதியிலும் ஸ்பெயின் அணியின் கையே ஓங்கியிருந்தது. எதிர் அணியை கோல் அடிக்க விடாமல் தடுத்ததுடன், அடுத்த கோல் வாய்ப்பையும் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

அப்போது போட்டியின் 58வது நிமிடத்தில் ஸ்பெயின் அணியின் பெட்ரோ பொர்ரோ அணிக்கான 2வது கோலை போட்டார். இதனால், பிரான்ஸ் அணி வீரர்கள் சோர்வடைந்தனர். எனினும், விடாமல் கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். கூடுதலாக வழங்கப்பட்ட நேரத்திலும் கோல் அடிக்கப்படவில்லை. ஆனால், ஆட்ட நேர முடிவில் 20 என்ற கோல் கணக்கில் பிரான்சை வீழ்த்தி ஸ்பெயின் வெற்றி பெற்றது.

# இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி வெற்றி..!

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் டி20 தொடரை 40 என்ற கணக்கில் இங்கிலாந்து முழுமையாக கைப்பற்றியது. இதையடுத்து, இரு அணிகளுக்கும் இடையேயான முதல் ஒருநாள் போட்டி இன்று பர்மிங்கம் நகரில் உள்ள எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் நடைபெற்றது. டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, இந்திய பந்துவீச்சாளர்களின் கட்டுப்படுத்தப்பட்ட பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 258 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

இதையடுத்து 259 ரன்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி இந்திய அணியின் தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா மற்றும்சுப்மன்கில்களமிறங்கினர்.நீண்ட இடைவெளிக்குப்பிறகுஅணிக்குத்திரும்பிய ரோகித்சர்மா21 பந்துகளில் 11 ரன்கள் மட்டுமே எடுத்து சாம் கரன் பந்தில் ஹாரி புரூக்கிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய விராட் கோலியும் 6 பந்துகளில் 5 ரன்கள் எடுத்த நிலையில் ஜோப்ரா ஆர்ச்சர் பந்தில் எல்பிடபிள்யூ முறையில் வெளியேறினார். அடுத்தடுத்து இரு மூத்த வீரர்களும் ஆட்டமிழந்ததால் இந்திய ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர். இருப்பினும், தொடக்க வீரர் சுப்மன் கில் பொறுப்புடன் விளையாடி அணியின் இன்னிங்ஸை நிலைநிறுத்தினார். அவருடன் இணைந்த ஷ்ரேயாஸ் ஐயர் 35 ரன்கள் சேர்த்து அணியை சரிவிலிருந்து மீட்டார். பின்னர்காயம் காரணமாக கில் 75 பந்துகளில் 80 ரன்கள் எடுத்த நிலையில் ரிட்டையர்டு ஹர்ட் ஆகி வெளியேறினார்.

அதன்பின் வாஷிங்டன் சுந்தர் மற்றும் அக்சர் பட்டேல் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் நிதானமாகவும் அதே நேரத்தில் அதிரடியாகவும் ரன்கள் சேர்த்து இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். வாஷிங்டன் சுந்தர் 63 பந்துகளில் 52 ரன்களுடனும், அக்சர் பட்டேல் 52 பந்துகளில் 57 ரன்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இதன் மூலம் இந்திய அணி 45.2 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 262 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி 10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# மலேசியாவில் பிரம்மாண்டமாக நடைபெறுகிறதா 'ஜெயிலர் 2' இசை வெளியீட்டு விழா?



நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில், இயக்குநர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு வெளியான 'ஜெயிலர்' திரைப்படம் உலகம் முழுவதும் மாபெரும் வரவேற்பைப் பெற்று வசூல் சாதனை படைத்தது. சன் பிக்சர்ஸ் தயாரித்த இப்படத்தில் ரம்யா கிருஷ்ணன், மிர்ணா, விநாயகன், வசந்த்ரவி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். அனிருத் இசையமைத்த பாடல்களும் பின்னணி இசையும் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

முதல் பாகத்தின் வெற்றியைத் தொடர்ந்து தற்போது 'ஜெயிலர் 2' திரைப்படம் விறுவிறுப்பாக உருவாகி வருகிறது. முதல் பாகத்தைப் போலவே மலையாள சூப்பர் ஸ்டார் மோகன்லாலும், கன்னட நடிகர் சிவராஜ்குமாரும் சிறப்புத் தோற்றங்களில் நடித்து வருவதாக கூறப்படுகிறது.

மேலும், ரம்யா கிருஷ்ணன், மிதுன் சக்கரவர்த்தி, சந்தானம், சுராஜ் வெஞ்சரமூடு, யோகி பாபு உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பாலிவுட் நடிகர் ஹிருத்திக் ரோஷனும் சிறப்புத் தோற்றத்தில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இருப்பினும், இதுகுறித்து படக்குழு அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.

முதல் பாகத்தில் இடம்பெற்ற முத்துவேல் பாண்டியன் கதாபாத்திரத்திலேயே ரஜினிகாந்த் மீண்டும் நடித்துள்ளார். முதல் பாகம் அவரது குடும்பத்தை மையமாகக் கொண்ட உணர்வுபூர்வமான ஆக்சன் கதையாக அமைந்திருந்த நிலையில், இரண்டாம் பாகம் முத்துவேல் பாண்டியன் சந்திக்கும் புதிய சவால்களை மையமாகக் கொண்டு உருவாகி வருவதாக கூறப்படுகிறது.

'ஜெயிலர் 2' திரைப்படம் வரும் அக்டோபர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது. இதற்கிடையில், படத்திலிருந்து 'ஒன் நேம்' என்ற ஆடியோ டிராக்கும் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்த நிலையில், 'ஜெயிலர் 2' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா தொடர்பாக புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, படத்தின் ஆடியோ லாஞ்ச் நிகழ்ச்சி மலேசியாவில் பிரம்மாண்டமாக நடைபெறலாம் என கூறப்படுகிறது. மேலும், 'ஜனநாயகன்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவை நடத்திய டத்தோ மாலிக், 'ஜெயிலர் 2' ஆடியோ லாஞ்சையும் ஒருங்கிணைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சமீபத்தில் டத்தோ மாலிக், ரஜினிகாந்தை நேரில் சந்தித்த புகைப்படங்களும் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன. விரைவில் இதுகுறித்த அறிவிப்பு வெளியாகும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

# அஜித்துடன் முதல் முறையாக கைகோர்க்கும் கயாடு லோஹர்?



ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் அஜித்குமார் நடித்த 'குட் பேட் அக்லி' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. குறிப்பாக அஜித்தின் மாஸ் ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தன. படத்தில் அர்ஜூன் தாஸ் தனது வில்லன் கதாபாத்திரத்தின் மூலம் பாராட்டுகளை பெற்றார். மேலும் பிரபு, பிரசன்னா, திரிஷா உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

'குட் பேட் அக்லி' வெற்றியைத் தொடர்ந்து, அஜித்குமாரின் 64வது திரைப்படத்தையும் ஆதிக் ரவிச்சந்திரனே இயக்க உள்ளார். தற்காலிகமாக 'ஏகே 64' என்று அழைக்கப்படும் இந்தப் படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று அஜித்குமார் சமீபத்திய பேட்டியில் தெரிவித்திருந்தார். தற்போது படத்தின் முன்தயாரிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

'ஏகே64'திரைப்படத்தில்நடிகைரெஜினாகசாண்ட்ரா,நடிகைஸ்வாசிகாஆகியோர்முக்கியகதாபாத்திரங்களில் நடிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தொடர்ந்து, அஜித்துக்கு ஜோடியாக நடிகை ஸ்ரீலீலா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தப் படத்தின் படப்பிடிப்பு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், 'ஏகே64' திரைப்படத்தில் நடிகை கயாடு லோஹர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது. இதனால் படத்தின் நட்சத்திர பட்டியல் மேலும் வலுவடைந்துள்ளதாக ரசிகர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது.

ஆனால், இதுகுறித்து படக்குழு தரப்பில் இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. எனவே,படத்தின்நடிகர்,நடிகைகள்மற்றும்தொழில்நுட்பக்குழுதொடர்பானஅதிகாரப்பூர்வஅப்டேட்டுக்காக அஜித் ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.